# இருபத்தோராம் நூற்றாண்டின் தமிழ் நாவலின் போக்கு

*Dr. T. Megarajah*[1]

megarajaht@esn.ac.lk

**ஆய்வுச்சுருக்கம்**

*இருபத்தொன்றாம் நூற்றாண்டுத் தமிழ் நாவல்கள், சமூக, அரசியல், பொருளாதார, கலாசார மாற்றங்களின் தாக்கத்தில் பொருள், வடிவம், பாணி ஆகிய தளங்களில் பல்வேறு புதிய போக்குகளை உருவாக்கியுள்ளன. ஆரம்பகால நாவல்கள் நீதியையும் அறத்தையும், தேசபக்தியையும், பெண் விடுதலையையும் வலியுறுத்தினாலும், 1960–70களில் மார்க்சியக் கொள்கை, 1980–90களில் பெண்ணியம், குழந்தைத் தொழில், புலம்பெயர்ந்தோர் பிரச்சினைகள் போன்ற சமூக நோக்குகள் மேலோங்கின. 21ஆம் நூற்றாண்டில் இத்தன்மைகள் விரிவடைந்து சர்ரியலிசம், இருத்தலியம், பின்நவீனத்துவம், தலித்தியம், விளிம்புநிலை, பின்காலனித்துவம் போன்ற அணுகுமுறைகளாக வளர்ந்தன. பெண்ணியப் பார்வையில் நாவல்களை எழுதிய எழுத்தாளர்கள் பெண் உடல், உரிமை, பாலினச் சுதந்திரம் குறித்து புதிய உரையாடல்களை உருவாக்கினர்;. தலித் அனுபவங்களை, முன்னர் ஒருபோதும் சொல்லப்படாதவற்றை புதிய நோக்கில் ஆழமாகப் பதிவு செய்தனர். இனவரைவியல் நோக்கில் எழுதப்பட்ட நாவல்கள் காலங்காலமாகப் புறக்கணிக்கப்பட்ட இனக்குழுமங்களின் வாழ்க்கையைப் பிரதிபலித்தன. பின்நவீனத்துவம், மாந்திரிக யதார்த்தம், அறிவியல் புனைகதை, மர்மக் கதையாடல் போன்ற பல்வகை பாணிகளில் நாவல்கள் பல வெளிவந்தன. கதையாடல் முறையில் நேர்கோட்டுத் தன்மையை மறுதலித்து, பல்வேறு வடிவங்களின் கலவைகளும் தொன்ம மறுவாசிப்பும் மொழி விளையாட்டும் கட்டுடைத்தலும் அதிகரித்துள்ளன. இவ்வாறு, இருபத்தொன்றாம் நூற்றாண்டு தமிழ் நாவல்கள் பன்முகக் கருத்துப் போக்குகளும் பாணி புதுமைகளும் இணைந்த, பரந்த களத்தில் சமூக, கலாசார, அரசியல், மனோதத்துவ அடுக்குகளைச் சோதித்து விரிவுபடுத்தும் ஒரு சக்திவாய்ந்த இலக்கிய வடிவமாக வளர்ந்துள்ளன. இதனை பகுப்பாய்வு முறையியலுக்கு அமைய எடுத்துக்கூறுவதாக இவ்வாய்வு அமைகின்றது.*

***திறவுச்சொற்கள்***: *தமிழ் நாவல், போக்குகள், தலித்தியம், பெண்ணியம், பின்நவீனத்துவம்*

## Abstract

Twenty-first-century Tamil novels have generated various new trends in terms of content, form, and style under the influence of social, political, economic, and cultural transformations. Although early Tamil novels emphasized morality, ethics, patriotism, and women's emancipation, the novels of the 1960s and 1970s were predominantly influenced by Marxist ideology, while those of the 1980s and 1990s highlighted social concerns such as feminism, child labor, and the problems of migrant communities. In the twenty-first century, these tendencies have expanded into approaches such as surrealism, existentialism, postmodernism, Dalitism, subaltern studies, and post colonialism. Writers who produced novels from a feminist perspective created new discourses on the female body, women's rights, and gender freedom. They also recorded Dalit experiences, including aspects that had never previously been articulated, from new perspectives and in greater depth. Novels written from an

[1] Lecturer, Department of Tamil Studies, Faculty of Arts and Culture, Eastern University Sri Lanka

ethnographic perspective reflected the lives of ethnic communities that had long been marginalized. Numerous novels have been published in diverse literary modes, including postmodernism, magical realism, science fiction, and mystery narratives. In terms of narrative technique, the conventional linear mode of narration has been rejected, while the blending of multiple forms, reinterpretation of myths, language play, and deconstruction have become increasingly prominent. Thus, twenty-first-century Tamil novels have developed into a powerful literary form that combines diverse ideological trends with stylistic innovations, while exploring and expanding the social, cultural, political, and psychological dimensions of human experience. This study examines these developments based on an analytical methodology.

***Keywords:*** *Tamil Novel, Trends, Dalitism, Feminism, Postmodernism*

## அறிமுகம்

*சமூக, அரசியல், பொருளாதாரக் கருத்தியல் மாற்றங்களால் காலத்திற்குக் காலம் இலக்கியத்தின் பொருண்மை, வடிவம், எடுத்துரைப்பியல் முதலானவற்றில் மாற்றங்கள் ஏற்படுவதன் அடிப்படையில் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல்வேறு நவீன சிந்தனைகளும் கோட்பாடுகளும் தமிழ் இலக்கியத்தில் தாக்கம் செலுத்தத்தொடங்கின. அதன் வெளிப்பாடாகவும் தமிழ்ச் சமூகம் எதிர்கொண்ட வெள;வேறு வாழ்க்கை நிலை சார்ந்த சவால்கள் காரணமாகவும் இருபத்தோராம் நூற்றாண்டில் பழைய கருத்தியல்களிலிருந்து மாறுபட்டதும் புதிய எடுத்துரைப்பு முறையியலை அடிப்படையாகக்கொண்டதுமான போக்குகள் தமிழ் இலக்கியத்தில் ஏற்பட்டன. இதனால் இலக்கியத்தில் கவனிக்கப்படாத மனிதர்கள், பேசப்படாத பொருண்மைகள், தொன்ம மறுவாசிப்புகள், நேர்கோட்டுத்தன்மையற்ற வெளிப்பாட்டு முறைகள் முதலானவை முதன்மைபெற்றன. இதனால் இலக்கியம் நவீனத்தத்துவ அடிப்படைகளையும் கேள்விக்குட்படுத்திய புதிய தளங்களில் பயணிக்கத்தொடங்கியது. நாவல் ஏனைய இலக்கிய வடிவங்களிலிருந்து தனிமனித வாழ்க்கை, சமூக வரலாறுகள், உணர்வுகளை வெளிப்படுத்தத்தக்க சிறந்த வடிவமாக இருப்பதனால் இலக்கியப் படைப்பு சார்ந்து ஏற்பட்ட அண்மைக்கால மாற்றங்கள் கூடுதலான அளவு தாக்கத்தினைத் தமிழ் நாவல்களில் ஏற்படுத்தின. அவ்விதத்தில் தமிழ் நாவலில் ஏற்பட்ட மாற்றங்களும் புதிய போக்குகளுமே இங்கு குறிக்கப்படுகின்றன.*

## ஆய்வு நோக்கமும் முறையியலும்

*இருபத்தோராம் நூற்றாண்டின் தமிழ் நாவலின் போக்குகளை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். குறிப்பாக இரண்டாயிரமாம் ஆண்டுகளுக்குப் பின்னரான தமிழ் நாவல்களில் எத்தகைய போக்குகள் வெளிப்படுகின்றன என்பதையும் அதன் காரணமாக தமிழ் நாவல்கள் பெறுகின்ற முக்கியத்துவத்தினையும் எடுத்துக்கூறுவதாக இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாய்வானது பகுப்பாய்வு முறையியலுக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது.*

**இலக்கிய மீளாய்வு**

*க.கைலாசபதியின் தமிழ் நாவல் இலக்கியம் எழுபதுகளின் நடுப்பகுதி வரையான தமிழ் நாவல் குறித்த திறனாய்வாக அமைந்துள்ளது. குறிப்பாக அறுபது, எழுபதுகள் காலப்பகுதியில் முனைப்புப்பெறத் தொடங்கிய போக்குகளை எடுத்துக்காட்டுகின்றது. சிட்டி, கோ.சிவபாதசுந்தரம் ஆகியோர் இணைந்து எழுதிய தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும் என்ற நூலிலும் எழுபதுகளின் நடுப்பகுதி வரையான தமிழ் நாவலில் வளர்ச்சியே எடுத்துக்கூறப்பட்டுள்ளன. இவ்விதத்தில் இவ்விரு நூல்களிலும் அவை எழுந்த காலப்பகுதியில் முதன்மைபெற்றிருந்த போக்குகளை அடையாளப்படுத்தியிருப்பதைக் காணலாம். இந்நூல்களை; தவிர, கா.சிவத்தம்பியின் நாவலும் வாழ்க்கையும் என்ற நூல் நாவல் இலக்கிய வடிவம் எவ்விதம் மனித வாழ்க்கையோடு பின்னிப்பினைந்தது என்பதை நிறுவுகின்ற வகையில் அமைந்துள்ளது. வி.செல்வநாயகத்தின் தமிழ் இலக்கிய வரலாறு, மா. இராமலிங்கத்தின் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் முதலான நூல்களும் இருபதாம் நூற்றாண்டு வரையான தமிழ் நாவல் வளர்ச்சி குறித்தே ஆராய்ந்துள்ளன.*

*இவ்விதம் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாவல் குறித்ததாகப் பல நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்துள்ளபோதிலும் இருபத்தோராம் நூண்டுத் தமிழ் நாவலின் போக்குகள் குறித்த ஆய்வுகள் தனியாக நிகழ்த்தப்படவில்லை.*

**கலந்துரையாடலும் பெறுபேறும்**

*தொடக்க காலத் தமிழ் நாவல்களில் நீதி, சமூக அறம் முதலானவையும் சுதந்திரப் போராட்டக் கால நாவல்களில் தேசபக்தி, தேச நலன், தேச ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை, விதவைகள் மறுவாழ்வு முதலானவையும் முக்கியம்பெற்றன. பின்னர் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியைத் தொடர்ந்து அதாவது அறுபது தொடக்கம் எழுபதுகள் வரை மார்க்சியக் கொள்கையைப் பிரதிபலிக்கும் நாவல்கள் எழுதப்பட்டன. எண்பது, தொண்ணூறுகளிலிருந்து பெண்ணியம், குழந்தைத் தொழிலாளர் பிரச்சினைகள், புலம்பெயர்ந்தோர் நெருக்கடிகள் நாவல்களில் முதன்மைபெற்றன. அதேவேளை கோட்பாடுகள், கருத்தியல்கள், செயல்வாதங்கள் என்பனவற்றை மையப்படுத்தியும் நாவல்கள் வெளிவந்தன. சர்ரியலிசம், இருத்தலியம், பின் அமைப்பியல், பின்நவீனத்துவம், பெண்ணியம், தலித்தியம், விளிம்புநிலை, பின்காலனித்துவம் போன்ற தளங்களில் முற்றிலும் புதிய பாணியிலும் புதிய நோக்கிலும் தமிழ் நாவல்கள் எழுதப்பட்டன. இவ்வாறு இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கால்கொண்டு இருபத்தோராம் நூற்றாண்டில் முனைப்புப்பெறத்தொடங்கிய போக்குகள் குறித்து இங்கு ஆராயப்படுகின்றன.*

*பெண்நிலைவாதம் பரந்துபட்டதொரு சிந்தனைத்தளத்தில் பெண்ணின் இருப்பினையும் சுதந்திரத்தினையும் சுய வாழ்வியல் நிலைப்பாட்டினையும் பேசுகின்ற வகையில் வளர்ச்சிபெற்றுள்ளது. 1980களிலிருந்து பெண்நிலைவாதம் சார்ந்த நாவல்கள் பல வெளிவந்திருந்தபோதிலும் 2000க்கு பின்னரான காலப்பகுதியில் பெண் எழுத்தாளர்கள்*

எழுதிய நாவல்கள் புதிய நோக்கிலும் புதிய சிந்தனைத் தளத்திலும் வெளிவந்தன. பெண் உடல், பெண் மொழி, உரிமை, சமத்துவம், உடல் வேட்கை எனப் பரந்த தளத்தில் எழுதும் போக்கு முக்கியத்துவம்பெற்றது. இது தமிழுக்குப் புதியபோக்காக அமைந்தது. பெண்நிலைவாத எழுத்தில் சல்மா, உமாமகேஸ்வரி, சு.தமிழ்ச்செல்வி ஆகியோர் முதன்மைப் படைப்பாளிகளாகவுள்ளனர். சல்மாவின் புனைகதைகளில் இஸ்லாமியப் பெண்களின் வாழ்க்கையும் பாலியல் விடுதலையும் பேசப்பட்டுள்ளன. இவரது 'இரண்டாம் ஜாமங்களின் கதை' இஸ்லாமிய சமூகத்தில் பெண் குறித்த கருத்தாக்கத்தைக் கேள்விக்குட்படுத்தும் வகையில் ஆக்கப்பட்டுள்ளது. உமாமகேஸ்வரியின் 'யாரும் யாருடனும் இல்லை'(2003), 'அஞ்சாங்கல்' (2013) ஆகிய நாவல்கள் பெண் இருப்புக் குறித்து கேள்வி கேட்பவையாகவுள்ளன. சு.தமிழ்ச்செல்வி கிராமப்புறத்திலிருக்கும் உழைக்கும் பெண்களின் போராட்ட வாழ்க்கையினைத் தனது நாவல்களில் எடுத்துரைத்துள்ளார். அண்மைக் காலத்தில் உலகளாவிய நிலையில் பாலினம் கடந்த நிலையும் பாலின அடையாளத்தை நீக்கும் நிலையும், பாலினச் செயல்பாட்டுக் கொள்கையாக தீவிரமாக விவாதிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்ச் சூழலிலும் மூன்றாம் பாலினத்தார் பற்றிய படைப்புகள் வெளிவரத்தொடங்கியுள்ளன. திருநங்கையர்களான மூன்றாம் பாலினத்தார் தமது வாழ்க்கையனுபவங்களை - சமூகம் தரும் நெருக்கடிகளை - அவமானங்களை - புறக்கணிப்புக்களை வலியின் மொழியில் நாவலாக்கி வருகின்றனர். பிரியா பாபுவின் 'மூன்றாம் பாலினத்தின் முகம்' குறிப்பிடத்தக்க நாவலாக உள்ளது. இதேவேளை தலித் பெண்களுக்கு ஏற்படும் கொடுமைகளைக் குறித்த நாவல்களுள் பாமா எழுதிய 'கருக்கு' என்ற நாவல் முக்கியமானதாகும்.

தலித்திய நாவல்கள் அண்மைக்காலத்தில் கூடுதலாக வெளிவரத்தொடங்கியுள்ளன. இதுவரை கவனிக்கத் தவறிய, புறக்கணிக்கப்பட்ட மனிதர்களும், அவர்களுடைய வாழ்க்கையும், மொழியும் தமிழ் நாவல்களில் வெளிவரத் தொடங்கியுள்ளன. அவ்விதத்தில் தமிழ் நாவல்களில் தலித் மக்களின் வாழ்வியலைக் கூறும் நாவல்கள் ஏராளமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. தமிழகத் தலித்திய நாவலாசிரியர்களில் பாமா, சிவகாமி, ராஜ்கௌதமன், இமையம் முதலானோர் குறிப்பிடத்தக்கவர். தலித் நாவல்கள் பெரிதும் சுயசரிதைத் தன்மையுடன் தன் எடுத்துரைப்புக்களாக அமைந்துள்ளன. இவற்றின் மொழியும் எடுத்துரைப்பியலும் எதிர் அழகியல் தன்மை கொண்டவையாக உள்ளன. பாமாவின் 'கருக்கு', 'சங்கதி இரண்டு' ஆகிய இரு நாவல்களும் மிகச் சிறந்த தலித்திய நாவல்களாகும். இவரின் முதல் நாவலான கருக்கு தமிழின் முதல் தலித் இலக்கியத் தன்வரலாற்று நாவலாகும். ஒரு பெண்ணாக, கிறித்தவப் பெண் துறவியாகத் தென்மாவட்ட கிராமம் ஒன்றில் தான் பட்ட அனுபவங்களே இவரது 'கருக்கு' நாவலாகும். இதுவொரு தன்வரலாற்று நாவலாகவும் அமைந்துள்ளது. தலித் இலக்கிய எழுத்தாளர்களுள் ஒருவரான சிவகாமியின் பழையன கழிதலும், ஆனந்தாயி ஆகிய நாவல்கள் தமிழில் பெரிதும் பேசப்பட்டன. 'பழையன கழிதலும்' என்ற நாவல் தலித் மக்களின் பிரச்சினையை முன் வைத்து எழுதப்பட்டதாகும். பூமணியின் 'பிறகு' என்ற நாவல் சிறந்த தலித் நாவல்களில் ஒன்றாகப் பலரால் பேசப்படுகிறது. கு.சின்னப்ப பாரதி எழுதிய 'சங்கம்' என்ற நாவலில் சமவெளிவாழ் தலித்திய மக்களைவிடக் கல்வி

*அறிவிலும், சமூகப் பிரச்சினையிலும் மிகவும் பிற்பட்டவர்களாக மலைவாழ் தலித் மக்கள் தமக்குள் இணைந்து ஒரு சங்கம் அமைக்கப்படும் துன்பத்தைக் காட்டுகிறது.*

*பெருங்கதையாடல்களே இலக்கியம் என்ற போக்குக்கு முரணாக, பிச்சைக்காரர்களுடைய மொழியும், வாழ்க்கையும், இழிவும், நாவலாக வெளிவரத்தொடங்கியுள்ளன. ஜெயமோகன் எழுதிய 'ஏழாம் உலகம்' (2003) நாவல் இவ்வகையில் முக்கியமானதொரு படைப்பாகும். எஸ்.ராமகிருஷ;ணனுடைய 'துயில்' (2012) என்ற நாவலில் வரக்கூடிய மனிதர்கள் ஊர் சுற்றிகளாகவும் நாடோடிகளாகவும் திருவிழாக்களில் வித்தைகாட்டிப் பிழைக்கக்கூடியவர்களாகவும் சொத்து, சொந்தமாக வீடு, ஊர் என்று எதுவுமே இல்லாதவர்களாகவும் தனித்த கலாசாரமோ, மொழியோ இல்லாதவர்களாகவும் அதேபோன்று தனித்த உணவுப் பழக்கமோ இல்லாதவர்களாகவும் உடலை மட்டுமே மூலதனமாகக்கொண்டு வேடிக்கைக்காட்டும் மனிதர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர். சு.தமிழ்ச்செல்வியின் 'கீதாரி' (2003) நாவலில் நாடோடி வாழ்க்கை வாழ்கின்ற மனிதர்களுடைய வாழ்கையைக் காணலாம். மேலும், தாழ்த்தப்பட்டவர்களின் வாழ்க்கையையும் தாழ்த்தப்பட்டவர்கள் பேசுகின்ற மொழியையும் இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ் நாவலாசிரியர்கள் வெளிப்படுத்திவருகின்றனர். ஶ்ரீதர கணேசனின் 'வாங்கல்'(2001), பாமாவின் 'வன்மம்' (2002), ராஜ் கௌதமனுடைய 'சிலுவை ராஜ் சரித்திரம்' (2002), சோ.தர்மனின் கூகை (2006), அழகிய பெரியவனின் 'தகப்பன்கொடி' (2011), சிவகாமியின் 'உண்மைக்கு முன்னும் பின்னும் (2013) ஆகிய நாவல்கள் இவ்வகையில் முக்கியமானவை.*

*இருபத்தோராம் நூற்றாண்டில் இனவரைவியல் சார்ந்த நாவல்கள் பல எழுதப்பட்டன. இத்தகைய நாவல்கள் இனக்குழும வாழ்வினை அவ்வினக்குழுமத்தைச் சேர்ந்தவர்களாலோ, அவ்வினக்குழுமத்தோடு சேர்ந்து வாழ்ந்தவர்களாலோ எழுதப்படுவனவாகும். அந்த வகையில் எஸ்.செந்தில்குமாரின் 'காலகண்டமும்'(2013), ஜோ.டி.குருஸின் 'ஆழி சூழ் உலகு'ம் முக்கியமானவை. ஜோ.டி.குருஸின் 'ஆழி சூழ் உலகு' நாவலில் கடல் தொழிலுக்குச் செல்லும் சாதாரண மக்கள் பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். சராசரியான மனிதர்களும், சமுகத்தில் எந்த முக்கியத்துவமுமில்லாத மனிதர்களும் நாவலில் கதாபாத்திரங்களாக முடியும் என்பதை 'ஆழி சூழ் உலகு' நாவல் மெய்ப்பித்தது. எஸ்.செந்தில்குமாரின் 'காலகண்டம்' நாவல் தமிழகத்தின்மீது நாயக்கர்கள் போர் தொடுக்கத் திட்டமிட்டு வந்தபோது, அவர்களோடு வந்த பொற்கொல்லர் சமூகத்தினர் ஆந்திராவிலிருந்தும், கன்னடத்திலிருந்தும் எப்படி இடம் பெயர்ந்தார்கள் என்பதையும் தமிழகத்தில் எப்படி நிலைபெற்றார்கள் என்பதையும் சொல்கிறது. சுகுமாரன் எழுதிய 'வெல்லிங்டன்'(2013) பி.ஏ.கிருஷ;ணன் எழுதிய 'புலிநகக் கொன்றை' (2004) ஆகிய இரு நாவல்களும் இனவரைவியல் சார்ந்த படைப்புகளில் முக்கியமானவையாகும்.*

*இதேவேளை இருபத்தோராம் நூற்றாண்டில் வட்டார வாழ்வியலை நோக்கியும் குறிப்பிட்ட இனத்தினரின் இனவரைவியலை நோக்கியும் நாவல்கள் வெளிவருவதும் குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் வட்டார வாழ்வியலை அடிப்படையாக வைத்து*

*கண்மணி குணசேகரன், தவசி ஆகியோர் சிறந்த நாவல்களை உருவாக்கியுள்ளனர். ம.தவசியின் 'சேவல்கட்டு' நாவல் இராமநாதபுரம் வட்டார சமூகப் பண்பாட்டு வாழ்வைப் பின்புலமாகக் கொண்டுள்ளது. ஜோ டி குரூஸின் ஆழிசூழ் உலகு, கொற்கை ஆகிய நாவல்கள் கடலோரப் பரதவரின மக்களின் இனவரைவியலை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன .பெருமாள்முருகனின் அண்மைக்கால நாவல்களான கங்கணம், மாதொருபாகன் என்பன கொங்கு வட்டாரத்தின் ஒரு பண்பாட்டுப் பிரதேசத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. கரன் கார்க்கியின் 'கறுப்பர் நகரம்' நாவல் சென்னை நகரின் புறஞ்சேரி வாழ்க்கையை மனிதநேயத்துடன் சித்திரிக்கின்றது. ஆர்.எஸ்.ஜேக்கப்பின் 'பனையண்ணன்' நாவலும் குமாரசெல்வாவின் 'குன்னி முத்து' நாவலும் பழைய தென்திருவிதாங்கூர் பகுதியில் வாழ்ந்த நாடார் இனத்தவரின் உள் முரண்களை அவ்வட்டாரப் பின்புலத்தோடு எடுத்துரைக்கின்றன.*

*பின்நவீனத்துவ செயல்வாதங்கள் தமிழ்ச் சூழலில் நிகழத்தொடங்கிய பின்னர் தமிழ் நாவல்களில் அதன் தாக்கம் வெளிவரத்தொடங்கியது. பின்நவீனத்துவ நாவல்களில் இதுவரையில் கற்பிக்கப்பட்டு வந்த புனிதம், உன்னதம் முதலான மதிப்பீடுகள் உடைபடத்தொடங்கியதோடு மதம், சாதி, பண்பாடு, விழுமியங்கள் முதலானவையும் தகர்க்கப்பட்டன. பின்நவீனத்துவத்தை உள்வாங்கிப் படைப்பவர்களாக தமிழவன், ரமேஷ்-பிரேம், ச.ராஜநாயகம், எம்.ஜி.சுரேஷ், சாருநிவேதிதா, ஜெனகப்பிரியா, ஸில்வியா, நாகார்ஜுனன் போன்றவர்களும் பின்நவீனத்துவத்தை அடிப்படையாக வைத்துப் புனைகதைப் பிரதிகளை உருவாக்குவதில் சோதனை முயற்சிகளில் ஈடுபடுகின்றவர்களாகக் கோணங்கி, ஜெயமோகன், எஸ்.ராமகிருஷ்ணன், கௌதமசித்தார்த்தன், அம்பை, பாமா போன்றவர்களும் உள்ளனர். தமிழவன் 'ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள்' என்னும் நாவலினூடாக, புதியவகை நாவல் முயற்சியை 1985 இல் தொடக்கிவைத்தார். கால வரிசையில் கதை கூறல், தர்க்கபூர்வமான நேர்கோட்டுக் கதைப் பின்னலை அமைத்தல், தெளிவாக வெளிப்படும் யதார்த்தத்தையும், தர்க்கபூர்வமான விவரணங்களையும் களமாகக்கொள்ளல் முதலான யதார்த்தவாதப் புனைவுகளின் அடிப்படைகளை நிராகரித்து புதிய வகையிலான கதைசொல்லல் முறையை அறிமுகம்செய்தார் தமிழவன். 'ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள்' நாவல் கதைசொல்லல் முறையில் தமிழ் நாவல்களுக்கேயுரியதாக இருந்துவந்த மரபை விடுத்து, அவற்றுக்கு அப்பாற்பட்ட தன்மையில் தமிழின் பொதுப்புரிதலில் இல்லாத உருவங்கள், குறியீடுகளைக் கொண்டிருப்பதிலும் எழுத்து சார்ந்த நிலவியல் தன்மை, அரசியல் செயல்பாடு போன்றவற்றை மாற்றுமுறையில் வெளிப்படுத்துவதிலும் தொன்மக்கூறுகளை மறுவாசிப்புச் செய்வதிலும் அதீத நிகழ்வுகள் சார்ந்த கதையாக்கத்திலும் பின்நவீனத்துவத் தன்மைகளை உள்வாங்கிப் படைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். இவரது இரண்டாவது நாவலாகிய 'சரித்திரத்தில் படிந்த நிழல்கள்' நாவலும் முக்கியமானதொரு படைப்பாகும். இந்நாவலில் பின்நவீனத்துவ மொழிவிளையாட்டு முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.*

*ரமேஷ் - பிரேம் எழுதிய 'புதைக்கப்பட்ட பிரதிகளும் எழுதப்பட்ட மனிதர்களும்' என்ற நாவல் மையமற்ற, நேர்கோட்டுத் தன்மையற்ற, யதார்த்த மறுப்பாகவுள்ள, மரபார்ந்த பாலியல் கதையாடலை மீறுகின்ற தன்மைகளைக் கொண்டதாக ஆக்கப்பட்டுள்ளது. ச.ராஜநாயகத்தின் 'காலமற்ற காலம்' என்ற படைப்பு நாவல் வடிவத்தை மீறிய புனைவாகும். கதைசொல்லியோ, மனித உருவுற்றக் கதைப் பாத்திரங்களோ சொல்லிவந்த கதைகூறல் முறையை மீறி, ஒருவருக்கொருவர் கொள்ளும் முரண்பாடுகள், அதனூடாக எழும் விவாதங்கள் போன்றவற்றின்மூலம் புதிய முறையில் கதைசொல்லப்படும் தன்மையுடையதாக இந்நாவல் அமைந்துள்ளது. அத்தோடு இந்நாவலில் மனிதமும், அதன் வரலாறும் வாழ்க்கையும் விளிம்புநிலைக் கண்கொண்டு மறுவாசிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம். எம்.ஜி.சுரேஷுன் 'அலெக்ஸாண்டரும் ஒரு கோப்பைத் தேநீரும்' என்ற நாவலும் பின்நவீனத்துவப் பிரதியில் முக்கியமானதாகும். வாசிக்கும்போது ஒரேநேரத்தில் சரித்திரக் கதையாக, துப்பறியும் புனைவாக, சமூகக் கதையாக, எதிர்காலங்குறித்த புனைவாக, விஞ்ஞானப் புனைவாக என பன்முனத்தன்மையுடையதாகவும் பன்முக வாசிப்புக்குரியதாகவும் இருக்கிறது. சாரு நிவேதிதா, 'எக்ஸிஸ்டென்ஷுயலிசமும் ஃபேன்ஸி பனியனும்', 'ஸீரோ டிகிரி', போன்ற நாவல்களை எழுதியுள்ளார். நேர்கோடற்ற முறையில் கதைசொல்லும் பிரதிகளாக இவை உள்ளன. பிரேம் குமார் எழுதிய 'சொல் என்றொரு சொல்' என்ற பின்நவீனத்துவ நாவல் புராண மரபுகளையும், இதிகாசங்களையும், பழங்கதைகளையும் எடுத்துக் கொண்டு புதுப்புது முறைகளில் கதை கூறுகிறது. யுவன் சந்திரசேகரின், 'பகடை ஆட்டம்' என்ற நாவல் பின்நவீனத்துவ நாவல்களில் புகழ் பெற்றது. சீனா, திபெத், இந்தியா, இமயமலை ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட ஜோமிட்ஸியா என்ற கற்பனை தேசத்தின் கற்பனைச் சரித்திரமே இந்நாவலாகும். கடந்த நூற்றாண்டில் மனித குலம் அடைந்த பெருந்தீமைகளின் கொடுங்கனவுகளின் அவலங்களும், அழிவுகளும் இந்த நாவலில் எடுத்துக்கூறப்பட்டுள்ளன.*

*பின்நவீனத்துவச் சிந்தனைகளை முற்றிலுமாக உள்வாங்கி நாவல்களைப் படைப்பது என்னும் செயல்பாடானது ஒருபுறம் நிகழ்ந்துகொண்டிருக்க, மறுபுறம் பின்நவீனத்துவச் சிந்தனையின் தாக்கத்தால் பலவித சோதனை முயற்சிகளும் நிகழ்ந்தவண்ணமேயுள்ளன. இவ்விதச் சோதனை முயற்சிகளை மேற்கொள்கின்றவர்களாக கோணங்கி, ஜெயமோகன், எஸ்.ராமகிருஷ;ணன், கௌதம சித்தார்த்தன், அம்பை, பாமா போன்றவர்கள் உள்ளனர். கோணங்கியின் 'உப்புக்கத்தியில் மறையும் சிறுத்தை' என்ற பிரதி, இரு பிறப்புகளாகக் கருதப்படுகின்ற அலிகளுடைய வாழ்க்கை முறை, எதிர்ப்பாலினருடன் புணர்ச்சியில் ஈடுபட வசதியாக அவர்களது உடல் செயற்கையான முறையில் தயாரிக்கப்படும் விதம், அலிகளாக இருப்பதனால் அவர்களடையும் துயரம், தனிமை போன்ற செய்திகள் பேசப்படுகின்றன என்பதைச் சிறுசிறு தொடர்கள் மூலமாகவும் குறிப்புகள் மூலமாகவும் அறியமுடிகின்றது. பிரதியை வாசிப்பதனூடாகக் கதையைப் புரிந்துகொள்ளல் என்ற முறை இங்கு மறுதலிக்கப்பட்டுள்ளதோடு மொழியைப் புரிதலினூடாக அர்த்தம்கொள்ளலும் அதனடிப்படையில் அப்பிரதி பன்மைத்துவக் கதையாடலை*

வெளிப்படுத்தலும் என்ற வகையிலேயே ஆக்கப்பட்டுள்ளது. இது இருபத்தோராம் நூற்றாண்டு கதைசொல்லலில் முக்கிய போக்காக வளர்ச்சிபெற்றுள்ளது.

ஜெயமோகனின் 'பின்தொடரும் நிழலின் குரல்' என்ற நாவல் இலட்சியம் குறிக்கோள், கொள்ளை என்ற இவற்றுக்கான போராட்டங்களின் பின்னால் உள்ள அழிவுகளைப் பின்நவீனத்துவக் கண்கொண்டு நோக்கி வெளிப்படுத்த முடியும் என்ற கருத்துகளுக்குப் பொருந்திப்போகக்கூடியதாக உள்ளது. எஸ்.ராமகிருஷ்ணனின் உபபாண்டவம் யதார்த்தவாத, மிகை மற்றும் மாந்தீரிக யதார்த்தவாதத் தன்மைகளைக் கொண்ட முன்னைய நாவல்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, பின்நவீனத்துவத்தின் முக்கிய கருத்தியல்களுள் ஒன்றாகிய 'கட்டுடைத்தல்' என்ற சிந்தனையை உள்வாங்கி மரபை விடுத்தல், புனிதத்தை மறுதலித்தல் போன்றவற்றையும் இணைத்துப் புனையப்பட்ட நாவலாகவுள்ளது. ஒரு கலைப்படைப்பிற்கு ஒரேயொரு மையம் மட்டும்தான் உண்டு என்பதை மறுப்பதுடன் திட்டவட்டமான ஒரேயொரு பொருள்தான் என உரிமைகொண்டாடுவதையும் இந்நாவல் மறுதலிப்புச்செய்கின்றது. பாமாவின் 'கருக்கு' என்ற நாவலும் மரபுவழிப்பட்ட கதை கூறல் பாணியிலிருந்து விடுபட்டு நவீன உத்திகள் பலவற்றைக்கொண்ட படைப்பாகவுள்ளது.இதேவேளை, தொன்மத்தை, பூர்வீகத்தை, பல தலைமுறைகளின் கதைகளை ஒரே நேரத்தில் சொல்வது என்ற போக்கைக் கொண்ட மேஜிக் ரியலிச பாணி நாவல்களும் வெளிவந்துள்ளன. கோணங்கியின் நாவல்கள் புதிய முயற்சிகளை மேற்கொண்டவை, புதிய முறையில் கதை சொல்ல முயன்றவை, யதார்த்த பாணியில் கதை சொல்வதை முற்றிலும் தவிர்த்தவை என்ற அளவில் முக்கியமானவை. கோணங்கியின் பாணியிலேயே ரமேஸ் பிரேம் 'சொல் என்றொரு சொல்'(2001), கனவில் பெய்த மழையைப் பற்றிய குறிப்புகள் (2000) போன்ற நாவல்களை எழுதினார்கள். எம்.ஜி.சுரேசும் இதே பாணியில் பல நாவல்களை எழுதியுள்ளார். இவ்வகையில் தமிழ் நாவல் வழக்கமாக கொண்டிருந்த வடிவத்தை, கதை சொல்லல் முறை, கதை சொல்வதற்கான மொழியை முற்றிலுமாக மாற்றியமைத்தவர்கள் என்ற வகையில் தமிழவன், கோணங்கி, எம்.ஜி.சுரேஸ், ரமேஸ் பிரேம் போன்றவர்கள் முக்கியமானவர்கள்.

பாலியல் எழுத்து, பிரதிகளின் ஊடாட்டம், மாந்திரிக யதார்த்தம், மொழிச் சிதறடிப்பும் விளையாட்டும். அறிவியல் கதையாடல், மர்மக் கதையாடல் என்பனவற்றைக் கொண்டு தமிழ் நாவலிலக்கியத்தில் பின்நவீனத்துவப் பிரதிகள் தயாரிக்கப்படுகின்றன. பாலியல் எழுத்திற்கு எடுத்துக்காட்டாக சாருநிவேதிதாவின் ஜீரோ டிகிரி, காமரூபக் கதைகள், தேகம், எக்ஸில் ஆகிய நாவல்கள் அமைந்துள்ளன. எம்.ஜி.சுரேஷுன் யுரேகா என்றொரு நகரம், 37, சிலந்தி ஆகிய மூன்று நாவல்களும் மர்மமும் அறிவியலும் நிறைந்த கதையாடல்களாக அமைந்துள்ளன. பன்னாட்டு முதலாளித்துவம் தனது வர்க்க நலனுக்காக தொழில்நுட்பத்தையும் தகவல் தொடர்பையும் தவறாகப் பயன்படுத்துவதை இந்நாவல் துப்பறியும் நாவலுக்குரிய விறுவிறுப்புடன் எடுத்துரைக்கின்றது. இவரது '37' எனும் நாவல் வேற்றுக்கிரக மனிதர்கள் பற்றிய புனைவாக அமைந்துள்ளது. இந்நாவல்களைப் போன்றே தமிழவனின் ஜி.கே. எழுதிய மர்ம நாவலும் துப்பறியும் நாவலுக்குரிய மர்மத்தன்மையுடனும் விறுவிறுப்புடனும் அமைந்துள்ளது. ஆயின்

அறிவியல் புனைவுக்கு மாறாக வரலாறு குறித்த புனைவு இந்நாவலில் இடம்பெற்றுள்ளது. பிறழ் எழுத்துமுறைக்கும் மொழிச் சிதறடிப்பிற்கும் புனைவுலகப் பயணத்திற்கும் எடுத்துக்காட்டாக தமிழவனின் 'சரித்திரத்தில் படித்த நிழல்கள்' நாவல் அமைந்துள்ளது.

பின்நவீனத்துவத் தமிழ் நாவலாசிரியர்களுள் நாவலை மொழியின் விளையாட்டுக் களமாகக் கையாளுகிறவர், கோணங்கி. பாழி, பிதுரா என்கிற வரிசையில் அண்மையில் வெளிவந்துள்ள இவரது 'த' நாவலும் பின்நவீனத்துவப் பிரதியாக அமைந்துள்ளது. ஆயிரம் வயதான ஆமை பிரகஸ்பதியுடன் உரையாடல் செய்வதாக இந்நாவலின் நூன்முகம் அமைந்துள்ளது. இந்நாவலில் கையாளப்பட்டுள்ள பழந்தமிழ்ச் சொற்களின் பயன்பாடும் பழந்தமிழ் இலக்கிய நடையும் பல்பிரதிகளின் ஊடாட்டமும் சாதாரண வாசகனுக்கு அந்நியமானவை. மட்டுமல்லாது மொழிநடை கவிதைத் தன்மையில் அமைந்து வாசகன் மனதில் வெவ்வேறு படிமக் காட்சிகளை உருவாக்குகின்றது. ஆயின், கதையின் எடுத்துரைப்பியலில் வெவ்வேறு வகையான முரண்பட்ட படிமங்கள் அடுக்கப்படும்போது வாசகன் கதையுலகிற்குள் தொடர்ந்து பயணம் செய்ய முடியாமல் வழிமறிக்கப்படுகின்றான். சாதாரண வாசகர்கள் முதல் அத்தியாயத்திலேயே நாவலைவிட்டு வெளியே திரும்பும் அபாயமும் இருக்கின்றது. மீண்டும் மீண்டும் கருத்தூன்றிய வாசிப்பினை மேற்கொள்கின்றபோதே இத்தகைய பின்நவீனத்துவப் பிரதிகளை விளங்கிக்கொள்ளமுடியும். அவசர நிலையிலுள்ள வாசகனாலோ கூர்ந்த கவனிப்பற்ற வாசகனாலோ இதனைச் சாத்தியப்படுத்தமுடியாது.

சமூக யதார்த்தத்தையும் பின்நவீனத்துவத்தையும் புதிய எடுத்துரைப்பியல் பாணிகளையும் ஒன்றிணைத்துக் கையாளக்கூடிய படைப்பாளிகளாக எஸ்.ராமகிருஷ்ணனும், சு.வேணுகோபாலும் விளங்குகின்றனர். எஸ்.ராமகிருஷ்ணனின் உப பாண்டவம், உறுபசி, யாமம் ஆகிய நாவல்கள் புதிய எடுத்துரைப்பியல் தன்மைகளைப் பெற்றிருந்தாலும் தனிப்பட்ட வாழ்வின் சமூகத்தின் அறியப்படாத பகுதிகளை வெகு நேர்த்தியாக எடுத்துரைக்கின்றன. சு.வேணுகோபாலின் அண்மையில் வெளிவந்த ஆட்டம், உயிர்நிலம் ஆகிய இரு நாவல்களும் உலகமயமாக்கலும் பன்னாட்டு முதலாளித்துவமும் தமிழக விவசாயிகளின் வாழ்க்கை ஆதாரத்தை அடியோடு பெயர்த்தெறிந்ததை வாழ்வின் உக்கிரத்துடன் விவரிக்கின்றன. விநாயக முருகனின் 'ராஜீவ்காந்தி சாலை' என்கிற நாவல் இதுவரை அறிந்திராத மென்பொருள் உலகின் உள்முரண்களை நாவலின் அடிப்படைப் பிரச்சினையாக வைத்து எழுதப்பட்டுள்ளது.

மேற்கூறியவாறு பெண்ணிலைவாதம், தலித்தியம், இனவரைவியல், பின்நவீனத்துவம் முதலான போக்குகள் தமிழ் நாவல்களில் செல்வாக்குச்செலுத்துவதோடு வேறுபல கருத்தியல்களைக் கொண்டதும் முன்னைய போக்குகளில் மாற்றங்களை உள்வாங்கியதுமான நாவல்களும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அவ்விதத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நவீனத்துவமும் அதனயாக யதார்த்தவாதமும் அரும்பத்தொடங்கி இருபதாம் நூற்றாண்டில் வளர்ச்சிகண்டிருந்த

*நிலையில் இருபத்தியோராம் நூற்றாண்டில் யதார்த்தவாதப் போக்கு தமிழ் நாவல் இலக்கியத்தில் பல புதிய பரிமாணங்களுடன் எழுச்சி பெற்றது. இரண்டாயிரத்திற்குப் பின் சோசலிசம், வர்க்கப் போராட்டம் என்பவற்றைப் பேசக்கூடிய படைப்பாளிகளும் தலித், சிறுபான்மையினர், மூன்றாம் பாலினத்தார் ஆகிய விளிம்புநிலை மக்களின் நுண்ணரசியலைப் பேசும் படைப்பாளிகளும் யதார்த்தவாத எழுத்து முறையினை நுட்பமாகக் கையாண்டுள்ளனர். அதேவேளை முற்போக்கு நாவலாசிரியர்கள் சிலர், இக்காலப் பகுதியில் மிகப் பெரிய ஆவண நாவல்களை உருவாக்கியுள்ளனர். இவ்வகையில் பொன்னீலனின் 'மறுபக்கம்', டி.செல்வராஜின் 'தோல்', சு.வெங்கடேசனின் 'காவல் கோட்டம்' ஆகிய மூன்று நாவல்களும் குறிப்பிடத்தக்கன. மண்டைக்காட்டு கலவரத்தை வரலாற்றுப் பின்புலமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள பொன்னீலனின் 'மறுபக்கம்' நாவல் பழைய தென்திருவிதாங்கூர் பகுதியில் இன்றைய குமரி மாவட்டத்தில் 19ஆம் நூற்றாண்டு தொடங்கி 20ஆம் நூற்றாண்டு வரை நிகழ்ந்த சமூகப் பண்பாட்டுப் போராட்டங்களை எடுத்துக்கூறுகின்றது. டி.செல்வராஜின் 'தோல்' நாவல் திண்டுக்கல் வட்டார தோல் தொழிற்சாலை தொழிலாளர்களின் சமூக அரசியல் போராட்ட வரலாற்றை ஆவணமாக்கியுள்ளது. சு.வெங்கடேசனின் 'காவல் கோட்டம்' நாவல் மதுரை நகரின் சமூகப் பண்பாட்டு அரசியல் வரலாற்றை நாயக்கர்காலம் தொடங்கி ஆங்கிலேய ஆட்சிக் காலத்தின் இறுதிவரை எடுத்துக்கூறுகின்றது. சுப்ரபாரதிமணியின் 'தறிநாடா' எனும் நாவல் திருப்பூர் வட்டாரத்தில் கைத்தறி நெசவு நலிவடைந்து விசைத்தறிகளும் பனியன் கம்பெனிகளும் நுழைந்த சமூக வரலாற்றுப் பின்புலத்தை மையமாகக் கொண்டுள்ளது.*

*வரலாற்று நாவல்கள் என்று முன்பு எழுதியவற்றுக்கும் தற்காலத்தில் எழுதப்படுவதற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. தற்காலத்தில் எழுதப்படுகின்ற வரலாற்று நாவல்களில் சாதாரண மனிதர்கள், திருடர்கள், பாலியல் தொழிலாளிகள், நாடோடிகள் என்று பலரும் வருகிறார்கள். மன்னர்களுடைய கதைகளை மட்டுமே வரலாறுகளாக, வரலாற்று நாவல்களாக புனையப்பட்டதிலிருந்து முற்றிலுமாக விடுபட்டு – சமகால சம்பவங்களையும், வரலாற்று நாவல்களாக எழுத முடியும் என்பதை நிரூபிக்கின்ற வகையிலான நாவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அவ்விதத்தில் ச.பாலமுருகனுடைய சோளகர் தொட்டி முக்கியமான படைப்பாகும். பூ மணியின் 'அஞ்ஞாடி' (2012) நாவல் சிவகாசியில் நடந்த பெரும் சமூக கலவரத்தைப் பற்றி பேசுகிறது. ஜெயமோகனுடைய 'வெள்ளை யானை' (2013) என்ற நாவல் 1878 – காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்டப் பெரும் பஞ்சத்தைப் பற்றிப் பேசுகிறது. அசோகன் நாகமுத்து எழுதிய 'போதியின் நிழல்' (2012) என்ற நாவல் யுவான் சுவாங் இந்தியா வந்த பயணத்தை பேசுகிறது. இவ்வாறு முன்னைய வரலாற்று நாவல்களிலிருந்து வேறுபட்ட தன்மையிலான புதிய போக்கிலான வரலாற்று நாவல்கள் வெளிவருவதும் அண்மைக்காலங்களில் அதிகரித்திருக்கிறது.*

**தொகுப்பும் முடிவுரையும்**

*இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல்வேறு நவீன சிந்தனைகளும் கோட்பாடுகளும் தமிழ் இலக்கியத்தில் தாக்கம்செலுத்தத் தொடங்கின. அதன் வெளிப்பாடாகவும் தமிழ்ச் சமூகம் எதிர்கொண்ட வௌ;வேறு வாழ்க்கை நிலை சார்ந்த சவால்கள் காரணமாகவும் பழைய கருத்தியல்களிலிருந்து மாறுபட்டதும் புதிய எடுத்துரைப்பு முறையியலைப் பின்பற்றுவதுமான போக்குகள் தமிழ் இலக்கியத்தில் ஏற்பட்டன. அதன் தாக்கத்தினைத் தமிழ் நாவல்களிலும் காணலாம்.*

*1980களுக்குப் பின்னர் பெண்நிலைவாதம், தலித்தியம், இனவரைவியல், பின்நவீனத்துவம் என்னும் கோட்பாடுகளை உள்வாங்கிய நாவல்கள் வெளிவரத்தொடங்கின. அத்தோடு ஆவண நாவல்கள், வட்டார நாவல்கள், புதிய நோக்கிலான வரலாற்று நாவல்கள், அறிவியல் நாவல்கள் முதலானவையும் பல்வேறு தனித்துவங்களுடன் வெளிவரத் தொடங்கின. இந்நாவல்கள் புதிய உள்ளடக்கங்களை மட்டுமன்றி மரபார்ந்த கருத்தியல்களைக் கேள்விக்குட்படுத்துவனவாகவும் பன்மைத்துவ அர்த்தப்பாடுகளையும், ஒற்றைத் தன்மையற்ற கலப்பு வடிவங்களின் ஒன்றிணைவாகவும் மீண்டும் மீண்டும் கூர்ந்த வாசிப்பனைக் கோருவனவாகவும் என தனித்த தன்மைகளுடன் வெளிவந்தன. இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ் நாவல்களில் பின்நவீத்துவக் கருத்தியல் கொண்ட நாவல்கள் வாசிப்புச் சூழலில் கூடுதல் தாக்கம் செலுத்துவதையும் இங்கு சுட்டிக்காட்டமுடியும்.*

**உசாத்துணைகள்**


- *கைலாசபதி,க., (1977). தமிழ் நாவல் இலக்கியம் திறனாய்வுக் கட்டுரைகள், சென்னை: குமரன் பப்ளிசர்ஸ்.*
- *கோணங்கி, (1997). உப்புக்கத்தியில் மறையும் சிறுத்தை, நாகர் கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.*
- *சாருநிவேதிதா, (1998). ஸீரோ டிகிரி, சென்னை: கிரணம்.*
- *சுரேஷ். எம்.ஜி., (2000). அலெக்ஸாண்டரும் ஒரு கோப்பைத் தேனீரும், சென்னை: புதுப்புனல்.*
- *பாமா, (1994). கருக்கு, மதுரை:சமுதாயச் சிந்தனை செயல் ஆய்வு மையம்.*
- *ராமகிருஷ்ணன், எஸ்., (2000). உப பாண்டவம், விருதுநகர்: அட்சரம்.*
- *ஜெயமோகன், (1999). பின்தொடரும் நிழலின் குரல், சென்னை: தமிழினி.*